ஒத்திவைப்புத் தீர்மானம்

கலவை காவல் நிலையத்தில் ஒருவருக்கு ஏற்பட்டுள்ள மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், கலவை காவல் நிலையத்தில், 3-2-1981 அன்று தியாகராஜன் என்கிற 11 வயது சிறுவன் லாக்கப்பில் இருந்தவன் அடிக்கப்பட்டதன் காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு இறந்ததனால் அப்பகுதி மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு திரு. கே. ஆர். சுந்தரம், திரு. என். வரதராஜன் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். திரு. கே. ஆர். சுந்தரம் அவர்கள்.

திரு. கே ஆர் சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டம் ஆற்காடு தாலுக்காவைச் சேர்ந்த கலவை போலீஸ் நிலையத்தில் 12 வயது மதிக்கத்தக்க தியாகராஜன் என்னும் சிறுவன் விளையாடிக்கொண்டிருந்த நேரத்தில் அப்பொழுது சென்றுகொண்டிருந்த பஸ் மீது கல் போட அதற்காக பஸ் ஊழியர்கள் போலீஸில் புகார் செய்து, போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பலமாக அடிக்கப்பட்டிருக்கிறான். பிறகு வேலூர் மருத்துமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்குப் பிறகு இறந்து விட்டான் என்ற தகவல் பரவி கலவை கிராம மக்கள் பரபரப்படைந்து, போலீஸ் நிலையத்தைத் தாக்குகின்ற நிலைமை ஏற்பட்டது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பரபரப்பு அடைந்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகள் தமிழகத்தில் தொடர்கதையாக ஆகிவிட்டது. போலீஸ் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கே அடித்துச் சாகடிப்பது போன்ற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே இப்படி நடக்கின்றன. இதற்கு முன்பு கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்ததைப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. எனவே, இந்த நிலையைப்பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் கிடைத்த தகவலின் படி 24 ஜனவரி 1981 பகல் 12-00 மணியளவில் குறம்பாடிக்

கரிகந்தங்கல் கிராமங்களுக்கிடையே ஆற்காடிலிருந்து கலவை நோக்கி சென்று கொண்டிருந்த நகர பஸ் T.M.N. 7227-ன் மீது கரிகந்தங்கல் கிராமத்தைச் சேர்ந்த தியாகராஜன், லோக நாதன் என்கிற முறையே 10, 11 வயது சிறுவர்கள் கற்களை எரிந் தனர். இதனால் ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் இருந்த கண் ணாடி உடைந்தது. பஸ்ஸை நிறுத்தி ஓட்டுநர் சிறுவர்களைப் பிடித்து கலவை காவல் நிலையத்தில் அன்று பகல் 12-15 மணிக்கு ஆஜர் செய்து சேதத்திற்கு நட்ட ஈடு கோரி புகார் கொடுத்தார். நிலையத்திலிருந்த தலைமைக் காவலர் பஞ்சாட்சரம் தக்க நட வடிக்கைக்கு புகாரை, உதவி ஆய்வாளருக்கு வைத்தார். அன்று இரவு 8-20 மணிக்கு உதவி ஆய்வாளர் காவல் நிலையம் வந் தார். அவரிடம் இரவு 8-30 மணிக்கு அச்சிறுவர்களின் உற வினர்களிடமிருந்து ரூ. 25 நட்ட ஈடாகத் தான் வாங்கிக் கொண் டதாகவும், அச் சிறுவர்களை விடுவித்து விடலாம் என்றும் கூறி ஓட்டுநர் லோகநாதன் ஒரு மனுவைக் கொடுத்தார். அச்சிறு வர்களை உதவி ஆய்வாளர் 8-45 மணிக்கு விடுவித்து விட்டார்.

27—1—1981 அன்று தனக்கு ''டெட்டனஸ்'' வியாதி என்று தியாகராஜன் வேலூர் பென்ட்லான்ட் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார். பிறகு மருத்துவ அறிவுரையை மீறி அங்கிருந்து 29—1—1981 அன்று விடுவிப்பு வாங்கிக் கொண்டு இரவு 10-30 மணிக்கு வேலூர் கிருத்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் அவருடைய உறவினர்களால் சேர்க்கப்பட்டார்.

3—2—1981 அன்று சிறுவன் தியாகராஜனின் தந்தை கிருஷ்ண பண்டிதர் கொடுத்த புகாருடன், கிருத்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்து கிடைத்த தகவலின்மேல் கலவை காவல் நிலையக் குற்ற எண் 19/81-ல் இந்திய தண்டனைச் சட்டம் 325-வது பிரிவின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அரசு பென்ட்லான்ட் மருத்துவ மனையில் 27—1—1981 அன்று சேர்க்கப்பட்டபோது தியாகராஜனை யாரும் துன்புறுத்தியதாக புகார் கூறப்படவில்லையாதலால் இது சட்டம் சம்பந்தப்பட்ட மருத்துவ வழக்கு என்று கருதப்படவில்லை. மருத்துவ மனை யிலிருந்து தியாகராஜனை 3—2—1981 அன்று இறந்து விட்டதாக கலவை காவல் நிலையத்திற்கு 4—2—1981 அன்று ''ரிப் போர்ட்'' கிடைத்தது. இதன் பிறகு வழக்கு இந்திய தண்டனை சட்டத்தின் 302-வது பிரிவின்படி மாற்றப்பட்டது. தியாகராஜனை காவல் நிலையத்தில் மூன்று முறை தூக்கித் தரையில் போட்ட தாகப் புகார் கூறப்பட்டதால் இராணிப்பேட்டை வருவாய்த் துறை கோட்ட அலுவலருக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. அவர் 5—2—1981 காலை வேலூர் கிருத்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்து சவப் பரிசோ தனைக்கு அனுப்பி வைத்தார். அவரை இதுகுறித்து காவல் துறை நிலை ஆணை எண் 145-ன்படி விசாரணை செய்யும்படி

மாவட்ட ஆட்சித் தலைவர் பணித்துள்ளார். இவ்விசாரணை அறிக்கையும், சவப் பரிசோதனையின் முடிவும் இன்னமும் அரசுக்குக் கிடைக்கவில்லை. இவை கிடைத்த பின்பே முழு விவரமும் தெரியவரும்.

24 ஆம் தேதி அன்று விடுவிக்கப்பட்டார். ஆனால், மீண்டும் 27 ஆம் தேதி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். ஆகவே, டெட்டனஸ் வியாதி அவருக்கு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் ஒரு புகார் வந்தது. காவல் துறையிலே 3 முறை தூக்கிப் போட்டார்கள் என்று. அந்தப் புகார் வந்ததன்பேரில் கோட்ட ஆட்சித் தலைவர் சவப் பரிசோதனைக்கு அனுப்பியிருக்கிறார். ஆகவே, இந்த இரண்டு ரிப்போர்ட் வருமேயானால், அந்த ரிப்போர்ட்டுகளுடைய அடிப்படையிலே குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். இந்த அரசு கட்டாயம் எடுக்கும். இப்பொழுது அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதுபற்றிப் பேசுவதன்மூலமாக, மேற்கொண்டு தகவல்கள் கிடைக்க வாய்ப்பில்லை. ஆனால், இந்த இரண்டு அறிக்கைகளும் அரசுக்குக் கிடைத்தவுடனே தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் இந்த அரசு என்பதை மட்டும் நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிலையில் இச்சம்பவம் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லையெனக் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. அறிக்கை அளித்தல்

பல மாவட்டங்களில் வறட்சி நிலைமை — அரசு நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 106-வது விதியின்கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அறிக்கை ஒன்றினை இப்பொழுது அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பருவமழைப் பொய்த்து விட்டதன் காரணமாக, பல மாவட்டங்களில் வறட்சி நிலவுவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, விவரமான அறிக்கையை இங்கே வைத்திருக்கிறேன். அது முழுவதையும் நான் படிக்கத் தேவையில்லை யென்றாலும்